மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

பல்லாவரம்.

# O.S.No.656/2023
# Old.No.538/2015
# PW 1

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரமிளா | மதம் | : இந்து |
| தந்தை / கணவர் பெயர். | : எட்வர்ட் | ஊர் | : |
| வயது | : | | |
| தொழில் | : | | |
| இனம் | : | | |
| கிராமம் | : | | |

**முதல் விசாரணை**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். இவ்வழக்கில் நான் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தையே எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ளுமாறு பிராத்திக்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. ஆலெக்ஸ் வைலட் என்பவர் பெயரில் உள்ள வரி ரசீது அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3.8.2005 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி பெயரில் உள்ள சொத்து வரி ரசீதுகள் (4 எண்ணிக்கை) **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி பெயரில் உள்ள சொத்து வரி ரசீதுகள் (2 எண்ணிக்கை) **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி பெயரில் உள்ள அனுபவ சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி பெயரில் உள்ள டவுன் சர்வே பீல்டு ரிஜிஸ்டர் **வா.சா.ஆ.6** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. வாதி பெயரில் உள்ள அடங்கல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் கணவர் எட்வர்ட் என்பவர் பெயரில் உள்ள குடும்ப அட்டை( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு) **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.5.2013 தேதியன்று 2 மற்றும் 3 பிரதிவாதிகள் வாதிக்கு அனுப்பிய சட்டஅறிவிப்பின் கையிருப்பு பிரதி **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.5.2013 தேதியில் வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் வாதி மற்றும் 3 நபர்கள்மீது தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.242/2014 ன் பிராதின் கையிருப்பு பிரதி **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியால் பல்லாவரம் சார்பதிவாளர் அவர்களுக்கு அனுப்பிய 16.8.2013 தேதியிட்ட அறிவிப்பு **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அஞ்சல் ஒப்புகை அட்டை (3 எண்ணிக்கை) **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி பெயரில் உள்ள மின் கட்டண அட்டை **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.3.2012 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**ஆவணங்கள் குறியீடு செய்ய ஒத்தி வைக்கப்படுகிறது.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.